*மாணவர் கவனத்திற்கு:*

**1)** *இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.*

**2)** *ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது, கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.*

**3)** *இவ் வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.*

**4)** *விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது, பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பிடப் படமாட்டா.*

---

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. [15×1=15]**

1. ஆனந்தரங்கப் பிள்ளையைப் பாராட்டி சீனிவாசக் கவி இயற்றிய சமசுகிருத நூல்-

(அ) ஆனந்த ரங்கராட் சந்தமு (ஆ) ஆனந்த ரங்கக் கோவை

(இ) ஆனந்த ரங்க நாட்குறிப்பு (ஈ) ஆனந்த ரங்க விஜய சம்பு

2. 'அனுஷ்டானம்' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்-

(அ) ஒழுங்கு முறை (ஆ) தருமக்கொடை

(இ) அன்றாடக் கடமைகள் (ஈ) அருள் செய்தல்

3. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் உலகநாடுகளுக்கு அறிமுகப் படுத்தியவர்-

(அ) டாக்டர் ஜி.யு. போப் (ஆ) எம். அரியல்

(இ) லியோ டால்ஸ்டாய் (ஈ) ஆல்பர்ட் சுவைட்டர்.

4. தொகலு கொம்பே ஆட்டத்தில் பொம்மைகள் என்ன தோலில் உருவாக்கப்படுகின்றன ?

(அ) புலி (ஆ) மாடு

(இ) மான் (ஈ) ஆடு

5. மக்களின் உயிர் மூச்சாக விளங்குவது -

(அ) காடு (ஆ) இயற்கை

(இ) காற்று (ஈ) நீர்

6. டால்ஸ்டாயின் மனதை மயக்கிய மரச்சோலை -

(அ) தேக்கு (ஆ) பூவரசு

(இ) மா (ஈ) பூர்ச்சு

7. மறுகக் கண்டது வான்சுழி -

(அ) ஆறு (ஆ) வெள்ளம்

(இ) நீரலை (ஈ) தண்ணீர்

8. தமிழரசியின் செங்கோலாக விளங்குவது -

(அ) திருக்குறள் (ஆ) குண்டலகேசி

(இ) சிலப்பதிகாரம் (ஈ) மணிமேகலை

9. கவிஞர் வைரமுத்து அமெரிக்கத் தாய்க்கு என்ன புறா கொண்டு சென்றார் ?

(அ) ஜோடிப்புறா (ஆ) மணிப்புறா

(இ) மாடப்புறா (ஈ) சமாதானப்புறா.

10. ‘கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்’ என்றவன் -

(அ) தருமன் (ஆ) அருச்சுனன்

(இ) வீமன் (ஈ) சகதேவன்

11. பசவண்ணர் பிறந் த மாநிலம் -

(அ) ஆந்திரம் (ஆ) கருநாடகம்

(இ) தமிழ்நாடு (ஈ) கேரளம்

12. ‘அரசனாக வேண்டுமெனில்’ பாடலை இயற்றியவர் -

(அ) சுப்பிரமணிய பாரதியார் (ஆ) பாரதிதாசன்

(இ) தேசிக விநாயகம் பிள்ளை (ஈ) சுத்தானந்த பாரதியார்

13. ‘வகுப்பு சிரித்தது’ இது என்ன ஆகுபெயர்?

(அ) இட (ஆ) கால

(இ) சினை (ஈ) பொருள்

14. நான்கு சீர்களால் அமைந்தது -

(அ) நெடிலடி (ஆ) சிந்தடி

(இ) குறளடி (ஈ) அளவடி

15. ‘வருக வருக’ என்பது -

(அ) இரட்டைக்கிளவி (ஆ) எவல் வினைமுற்று

(இ) அடுக்குத் தொடர் (ஈ) சொல்லணி

**II. கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க :** **[5×1=5]**

16. ஆபுத்திரனுக்கு அமுதசுரபியைக் கொடுத்து உதவிய தெய்வம் ____________.

17. குழவி ____________ வாழ்தல் இனிது.

18. சின்னப்பிள்ளை தொடங்கிய தொண்டு நிறுவனம் ____________.

19. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய நூல் ____________.

20. பூங்குன்றனும் இளநாகனும் வழக்கைத் தீர்க்கும் படி ஊர்ப் பெரியவர் ____________ இல்லத்திற்குச் சென்றனர்.

**III.** 21. **பொருத்துக :** **[5×1=5]**

| | | |
|---|---|---|
| 1. | சீவகனின் குலகுரு | ஃபிளாரிடா ________ |
| 2. | மினிஇந்தியா | சிலேடை ________ |
| 3. | தருக்கள் | சேக்கிழார் ________ |
| 4. | இயேசு பிரான் வாழ்த்து | உவமைத் தொகை ________ |
| 5. | இரு பொருள் | ஹீஸ்டன் ________ |
| | | கண்ணதாசன் ________ |
| | | சுந்தரமுனிவர் ________ |
| | | பொதியலர் ________ |

## IV. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வாக்கியத்தில் விடைதருக. [10×1=10]

22. ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு எத்தனை தொகுதி களாக அச்சிடப்பட்டுள்ளது ?
23. அடிப்படை இன்பத்தில் முதன்மையான இன்பம் எது ?
24. பூங்குன்றன் என்ன காரணத்திற்காக நிலத்தை விற்றார் ?
25. மனோன் மணிக்கு ஏற்ற மணவாளன் என்று சுந்தரமுனிவர் யாரைக் குறிப்பிடுகிறார் ?
26. மனவளர்ச்சி இல்லாத மனிதர் வாழும் இடம் எதைப் போன்றது ?
27. மழைக்கும்மிப் பாடலில் வரும் கடவுள் யார் ?
28. முத்தநாதன் புத்தகக் கவளியில் என்ன கொண்டு வந்ததாகக் கூறினான் ?
29. இயேசு பிரான் யார்யாரை இரட்சிக்கிறார் ?
30. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் என்ன அணி ?
31. மோனை என்றால் என்ன ?

## V. பின்வரும் கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக. [15×2=30]

32. ஆனந்தரங்கப் பிள்ளையின் மகள் திருமணத்திற்கு வந்த பிரெஞ்சுக்காரர்கள் எவ்வாறு வரவேற்கப் பட்டார்கள் ?
33. வீடு திரும்பிய அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ச்சியுடன் கூறியது என்ன ?
34. சோலிகரின் ஆட்டப் பின்னணியில் உள்ள நம்பிக்கைகள் யாவை ?
35. சாந்தா பார்பரா தங்குவதற்குச் சிறந்த இடம் என்பதற்கு விடுதி மேலாளர் கூறிய காரணங்கள் யாவை ?
36. நன்செய் நிலத்தின் இயற்கை வளத்தை மனோன்மணீயம் எவ்வாறு வருணிக்கிறது ?
37. இளநாகன் புதையலை எதனால் மறுத்தார் ?
38. நாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார் ?
39. இறைவனை குணங்குடி மஸ்தான் எவ்வாறு வாழ்த்தி என்ன வேண்டுகிறார் ?

40. முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனைக்கு எவ்வாறு சென்றான் ?

41. சேரனின் யானை நிலவின் மேல் கைநீட்டியது ஏன் ?

42. இளைஞனின் வலிமை கவிஞர் சிற்பியால் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது ?

43. கடவுளின் செயல்கள் யாவை ? அவற்றை அவர் எவ்வாறு செய்கிறார் ?

44. அணி என்றால் என்ன ? அணியின் வகைகள் யாவை ?

45. உடம்படுமெய் என்றால் என்ன ? அவை யாவை ?

46. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ? அவற்றின் பெயர் களைக் குறிப்பிடுக.

**VI. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக் கியங்களில் விடை எழுதுக.[5×3=15]**

47. கருநாடக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான யக்ஷகானத்தைப் பற்றி எழுதுக.

48. தமிழ் வித்துவான்களிடம் பாடம் கேட்க இயலாமைக்கு அந்தணர் கூறிய காரணங்கள் யாவை ?

49. விசயன் வீமனுக்குச்சினம் தணியும்படி கூறியவை யாவை ?

50. செய்யுள் விகாரம் என்றால் என்ன ? எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

51. ‘கந்தையானாலும் கசக்கிக் கட்டு ; கூழானாலும் குளித்துக்குடி’ – இப்பழமொழியை விளக்குக.

**VII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக : [5×3=15]**

52. ‘இவரைப் போன்ற பெண்மணிகளுக்கு அளிக்கப்படும் இந்த விருதால் விருதுகளுக்குத் தான் பெருமை.’

53. ‘குழப்பமான நம் வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனா தீர்ப்பு வழங்கப் போகிறான் ?’

54. ‘ஏடா ! அழியல் எழுந்திது கொள்ளாய் ! நாடு வறங்கூரினும் இவ் வோடு வறங் கூராது.’

55. ‘அவ்வழி நல்லை வாழிய நிலனே !’

56. ‘தோழனாகி யாவர்க்கும் தொண்டனாக வேண்டுமடா!’

**VIII.பின்வரும் கேள்வி ஒவ்வொன்றிற்கும் எட்டு வாக்கியங்களில் விடைதருக.[2×4=8]**

57. ஆனந்தரங்கப் பிள்ளை தம் நாட்குறிப்பில் குற்றமும் தண்டனையும் பற்றி என்ன எழுதியுள்ளார் ?

**அல்லது**

ஏவுகணை விண்வெளிக்கு ஏவப்படும் முறையினை விளக்குக.

58. தீயவழியில் வரும் செல்வம் எவ்வாறு பயனின்றிப் போகும் ?

அல்லது

பூங்குன்றன், இளநாகன் இருவரும் நற்பண்புகள் நிறைந்த பெரியோர் என்பதை விவரிக்க.

**IX.** 59. **பின்வரும் பாடலை வாசித்து அதன் திரண்ட பொருளை எழுதுக. [1×4=4]**

இலக்கியம் என்பதே இனிக்கும் கரும்பு

எடுத்துக் கடித்து அதை அருந்து !

இலக்கணம் என்பது விளக்கெண் ணெய்

இல்லை அது தேன் விருந்து !

தமிழ் மொழிப் படிப்பு உன் தாய்மொழிப் படிப்பு

தவறாது அது முதல் வேண்டும்.

தமிழினைச் சரிவரப் படித்துத் தேர்க !

தமிழனாய் இருக்க வேண்டும்.

60. **கேட்கப்பட்டுள்ள பாடல் வரிகளை அடி பிறழாமல் எழுதுக. [1×4=4]**
''காதொளிரும்........'' எனத் தொடங்கும் மொழிவாழ்த்து

அல்லது

'பொல்லாத சொல்லி........' எனத் தொடங்கும் பழமொழிப் பாடல்.

61. பெண்ணுக்கு உரிமை வேண்டும் என்பதை பாரதிதாசன் எவ்வாறு வலியுறுத்துகிறார்?

**[1×4=4]**

அல்லது

திரு. வி.க. பாரதநாட்டின் சிறப்புகளை எவ்வாறு பட்டியலிடுகிறார்?

**X.** 62. பள்ளி மாற்றுச் சான்றிதழ் கேட்டு உன் தலைமை ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம் வரைக. **[1×5=5]**

அல்லது

உன் பள்ளியில் நிகழ்ந்த ஆண்டு விழாக் கொண்டாட்டத்தைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

விடை:

63. **கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்புப் பற்றி ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக.** **[1×5=5]**

கல்விச் சுற்றுலாவும் மாணவர் பெறும் பயன்களும்

அல்லது

இன்றைய வாழ்வில் ஊடகங்களின் பங்கு

அல்லது

நான் விரும்பும் திருவிழா.